செய்தித் தாளகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது ளு வைகாசி மீ கச உ வெள்ளிக்கிழமை (28-5-1971) [இல-எ

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY
-3 JUN 1971

சைவ நற்சிந்தனை — 3

## குருவும் சீடரும்

[ திரு ச. அம்பிகைபாகன் அவர்கள் ]
( அண்மையில் நிகழ்த்திய வானொலிப் பேச்சு )

ஓம் ஸஹ நாவவது ஸஹ நௌபுனக்து ஸஹ வீர்யம் கரவா வஹை
தேஜஸ் விநா தீதமஸ்து மாவித்விஷா வஹை
ஓம் சாந்தி. சாந்தி. சாந்தி.

இச் சாந்தி சுலோகம் தைத்திரீய உபநிடதத்தில் ஆனந்த வல்லியில் காணப்படுகிறது. இச் சுலோகத்தை ஆச்சிரமங்களில் வசித்த குருவும் சீடரும் பாட ஆரம்பத்திலும் முடிவிலும் ஓதுவது வழக்கம். இதன் தமிழ் ஆக்கம் பின்வருமாறு "ஓம் (குரு சிஷ்யர்களாகிய எங்கள் இருவரையும் சேர்த்து (பிரம்மம்) காப்பாற்றட்டும். எங்கள் இருவரையும் சேர்த்துப் போஷிக்கட்டும். நாங்கள் இருவரும் சேர்ந்து வீர்யத்துடன் உழைப்போமாக. எங்கள் அத்தியயனம் பிரகாசமுள்ளதாகவும கூர்மையுள்ளதாகவும் ஆக வேண்டும. (ஒருபோதும் நாம் ஒருவரை யொருவர்) துவேஷிக்காமலிருக்க வேண்டும்.

இச் சுலோகத்தில் ஆசிரியருக்கும் மாணவருககுமிடையில் இருக்கவேண்டிய நல்லுறவு தெளிவாக எடுத்துக் காட்டப்படுகிறது. இப்படி ஒரு சூழல் ஏற்பட்டால்தான் போதனை பயனுடையதாயிருக்கும்.

இப்பொழுது ஆசிரியருக்கும் மாணவருககுமிடையில் நல்லுறவில்லாதிருத்தல் பெருங் குறையாகும. இக்குறைவே பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும், சர்வகலாசாலைகளிலும் காணப்படும் சகலவித குழப்பங்களுக்கும் ஒழுங்கீனங்களுக்கும் காரணமாகும். நமது கல்வி நிலையங்களில் பழையபடி ஒழுங்கை நிலைநாட்ட வேண்டுமாயின் ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையில் மேல் எடுத்தாளப் பெற்ற சாந்தி சுலோகத்தில் குறிப்பிடப்பட்ட நல்லுறவை மீண்டும் ஏற்படுத்த வேண்டும்.

இதே உபநிடதத்தில் சுவாத்தியாயத்தையும் (ஓதலையும்) பிரவசனத்தையும (ஓதுவித்தலையும்) ஒருபொழுதும் கைவிடக் கூடாதென உபதேசிக்கப் பட்டிருக்கின்றது. திருவள்ளுவரும் சாந்துணையும் கற்றல் வேண்டுமெனக் கூறியிருப்பது இங்கு ஞாபகத்துக்கு வரும. இதுபற்றி இவ்வுபநிடதம் கூறுவது பின்வருமாறு, "அதிதிகளின் பூஜையுடன், சன சமூகக் கடமைகளுடன், மக்களைக் காப்பதுடன், மக்களைப் பெறுவதுடன், — பௌத்திரர்களைப் பெற்ற பின்னுங்கூட சுவாத்தியத்தையும் பிரவசனத்தையும் கைவிடாமல் காப்பாற்ற வேண்டும்."

கல்விகற்ற முடிவில், சீடர்கள் வீட்டுககுத் திரும்பும் சந்தர்ப்பத்தில் வாழ்க்கையில் எப்படி நடந்து கொள்ளவேண்டு மென்று குரு அவர்களுக்குப் போதிப்பதுண்டு. இது பட்டமளிப்புப் பிரசங்கம் போன்றது (Convocation address) உலகத்தில் மிகப்பழைய பட்டமளிப்புப் பிரசங்கம் தைத்திரீய உபநிடதத்தில் காணப்படுகிறது. அதில் ஒருபகுதி பின்வருமாறு:—

"உண்மை பேசு, தருமவழியில் நட, ஸ்வாத்தியத்திலநின்று நழுவிவிடாதே குருவுக்குப் பிரியமான தட்சணையைக் கொணர்ந்து கொடுத்து (அவரிடம்விடை பெற்றுக் கொண்டபின்) ஸந்ததியாகிற நூலை அறுத்து விடாமலிரு சத்தியத்திலிருந்து மறந்தும் நழுவுதல கூடாது; தர்மத்திலின்றும் மறந்தும் நழுவுதல் கூடாது; ஆத்மஞானத்தை வளர்க்கும் நன் முயற்சிகளினின்றும் மறந்தும் நழுவுதல் கூடாது; பெருமையுள்ளனவற்றைப் போற்றுவதினின்றும் நழுவுதல் கூடா; துசுவாத்தியாயப் பிரவசனங்களினின்றும் மறந்தும் நழுவுதல்கூடாது, தேவபித்ரு காரியங்களினின்றும் மறந்தும நழுவுதல் கூடாது தாயைத் தெய்வமாய்க் கொண்டிரு; தகப்பனைத் தெய்வமாய்க் கொண்டிரு, குருவைத் தெய்வமாய்க்கொண்டிரு, அதிதியைத்தெய்வமாய்க் கொண்டிரு; குற்றமற்ற கருமங்கள் எவையோ அவையே செய்யத்தக்கன. மற்றவை அன்று. எங்களிடம் நன்னடத்தைகள் எவையோ அவையே உன்னால் பின்பற்றத்தக்கவை. மற்றவை அன்று." ——

உ
திருச்சிற்றம்பலம்

தூக்கு சீர்த்திருத்
தொண்டத் தொகைவிரி
வாக்கினுற் சொல்ல
வல்ல பிரானெங்கள்
பாக்கி யப்பய னுப்பதி
குன்றை வாழ்
சேக்கி ழானடி
சென்னி யிருத்துவாம்.
திருச்சிற்றம்பலம்

## சேக்கிழார் நாயனுர் குருபூசை

சைவபரிபாலன சபை
நாவலர் ஆச்சிரம மண்டபத்தில்

முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை ஷை குருபூசை நிகழும். சிவபூசா மண்டபத்தில் சிவபூசை, நாவலர் மண்டபத்தில் நடராசர் பூசை, புராணபடனம் (சேக்கிழார் நாயனுர் புராணம்) மாகேசுர பூசை முக்[illegible] நிகழ்ச்சிகளாகும்.

x x x

### சேக்கிழார் மன்றம்

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம், சேக்கிழார் குருபூசையை யாழ். இந்துக் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் 29—5—71 சனிக்கிழமை நடத்த ஒழுங்கு செய்துள்ளது நிகழ்ச்சிகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் தேவார இன்னிசைச் செல்வர் தேவாரமணி P. A S. இராசசேகரன் அவர்களதும், அவர்களது மாணவர்களதும் திருமுறைப் பண்ணிசை நிகழ்ந்தபின், திரு. மு. ஞானப்பிரகாசம் B. A., BSc. அவர்களுடைய சிறப்புச் சொற்பொழிவு நிகழும் சைவப்புலவர்மணி திரு. த குமாரசுவாமிப்பிள்ளை அவர்களும் பிறரும் பெரியபுராணம் திருநாவுக்கரசு நாயனுர் புராணம் ஒருபகுதி படனஞ் செய்வார்கள் ஈற்றில கல்லூரி விடுதிச்சாலையில் மாகேசுரபூசை நிகழும்.

x x x

### நல்லை. ஆதீனத்தில்

நல்லை, ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நம்பியாண்டார் நம்பி குருபூசையும் சேக்கிழார்சுவாமிகள் குருபூசையும் சிறப்புற நிகழவிருக்கின்றன. 28, 29-5-71 ஆகிய இரு தினங்களிலும் காலையும் மாலையும் சிறப்புறநிகழவிருக்கின்றன. ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமகள் இன்னிசை விரிவுரை, புராணபடனம், திருமுறைக்கச்சேரி, சொற்பொழிவு

---

## தேவை
## உருத்திராக்க மணி மாலை

சிவபக்தர் ஒருவர் தமது தினசரி வழிபாட்டு உபயோகத்துக்காக உருத்திராக்க மணி மாலை ஒன்றினைப் பெற விரும்புகின்ருர். தகுந்த விலை தரப்படும். மணிகளாகவேனும், மாலையாகவேனும் கொடுக்க வைத்திருப்பவர்கள் எம்மோடு தொடர்பு கொள்வார்களாக.

அதிபர்,
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை,
450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

27-5-71

---

நல்லூரில் ஓதுவார்மூர்த்திகளை ஆசிரியராகக் கொண்ட

## பண்முறைப் பயிற்சிவகுப்பு

1—6—71 செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில், யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு தி முருகேசம்பிள்ளை அவர்கள் தலைமையில், காஞ்சிரம் மெய்கண்டார் ஆதீன பண்ணிப்புலவர், தேவார ஓதுவார் திரு P. A. S. இராசசேகரன் அவர்கள் தேவாரப் பண்ணிசை வகுப்பொன்றை ஆரம்பிப்பார்கள். வகுப்பிற் சேர விரும்புவோர் குறித்த நேரம்சமுகமளிப்பார்களாக தேர்வில் சித்தி பெறுவர்களே வகுப்பிற் சேர்ந்து படிக்கத்தகுதியுடையவர்கள். ——

## பண் பயிற்சியும் கிரியை பயிற்சியும்

### சைவக் குருமார் அர்ச்சகர் சபை

விரோதிகிருது வருஷம் வைகாசி மாதம் 12-ஆம் திகதி (26-5-71) புதன்கிழமை கட்டுவன் துறட்டையிட்டி ஞான வைரவப் பெருமான் ஆலயத்தில் அகில இலங்கைச் சைவககுருமார் அர்ச்சகர் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சபையின் வளர்ச்சிபற்றிஆராயப் பெற்றதுடன், சைவமாணவர்களுக்கு தேவாரப்பண் முறை வகுப்பும், சமஸ்கிருத மொழிப் பயிற்சியும் கிரியை முறைகள் பற்றிய பயிற்சியும் அளிககக் கூடிய வகுப்பொன்றை நடத்த வேண்டுமெனத் தீர்மானிககப் பெற்றது.

உத்தியோகஸ்தர் தெரிவு: தலைவர்: ஸ்ரீமத். க சிவலோகநாதக் குருக்கள், உப தலைவர் ஸ்ரீமத். க சிவபாதசுந்தரக் குருக்கள், காரியதரிசி: திரு வ. வெ. நவரத்தினம், உப காரியதரிசி: திரு. கு. பால சுப்பிரமணியம், தனாதிகாரி: ஸ்ரீமத். தி. மாணிக்கவாசகக் குருக்கள ந. வி.

---

சேக்கிழார் சுவாமிகள் திருவீதி உலா ஆகியாம்நிகழ்ச்சிகள் இடம்பெறும். பண்டிதர் செ. சிவப்பிரகாசம், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரால் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தப்பெறும். மாலை 6-30 மணிக்கு விழாப் பூர்த்தியுறும்,

---

## பாலஸ்தாபனம்

கௌரி அம்பாள் சமேத கேதீஸ்வரப் பெருமானுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் 6-6-71 ஞாயிறுக்கிழமை சுவாதி நக்ஷத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபதினத்தன்று காலை 8-45 மணிக்குமேல் பாலஸ்தாபனம் செய்யத் திருவருள்பாலித்திருக்கின்றது. ஷை கிரியையிற் பங்குபற்றி கேதீஸ்வரநாதனின் திருவருளைப் பெறும் வண்ணம் அடியார்கள் சமுகமளித்தல் முக்கியமாகும். 3-6-71 வியாழக்கிழமை கிரியைகள் ஆரம்பமாகும். அடியார்கள் அபிஷேகத் திரவியங்களையும்; பணவுதவி செய்யவிருப்பமுள்ளவர்கள் பணத்தையும் திருக்கேதீச்சர தேவஸ்தானத்திற்கு அனுப்பிவைப்பார்களாக.

### பெரியபுராண விரிவுரை

ஆனைக்கோட்டை, உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயத்தில் வெள்ளிக்கிழமைதோறும் மேற்படி ஆலய சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. சிவவடிவேற்பிள்ளை அவர்கள் தலைமையில் கூட்டுப் பிரார்த்தனையும், ஆசிரியர் வே. சுப்பிரமணியம் அவர்களால் சிவபுராண பசனையும், பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் அவர்களால் பெரியபுராண விரிவுரைகளும் நடைபெற்று வருகின்றன. பல அடியார்கள் பக்தியுடன் இவ்வைபவங்களில் பங்குபற்றுகின்றர்கள். (ந. தீ.)

### நியமனம்

கூ. மொ. வி. தாபனப்; இலங்கா சலுசலா, கூட்டுறவுச் சங்கங்கள் யூனியன், விற்பனவு இலாகா, கொள்வனவு இலாகா ஆகியன நல்லூர்த் தொகுதியில் நடத்தும் கடைகள், டிப்போக்கள் முதலியவற்றைப் பார்வையிட வண்ணார்பண்ணை திரு எ. சோமாஸ்கந்தன் அவர்கள் நியமிக்கப்பெற்றுள்ளனர். இவர் யாழ்ப்பாணம் மேர்ககண்டைல் வங்கியில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். யாழ்ப்பாணம் கூட்டுறவு வங்கியில் டைரக்டராக இப்பொழுது கடமையாற்றி வருகின்றனர்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருதுஞூ வைகாசிமீ கச-வ வெள்ளிக்கிழமை [1971]

## தலையங்கம்

கொழும்புத் தகுதிவாய்ந்த அதிகாரியின் அநுமதிபெற்ற பின்பே ஆசிரியத் தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் எங்கள் பத்திரிகை அதிகாரியின் அங்கீகாரத்தை உரிய நேரத்தில் பெறுவது இயலாமையாலும் சில தினங்களுக்கு ஆசிரியத் தலையங்கங்கள் வெளிவரமாட்டா வென்பதை வாசக நேயர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்

சைவ நற்சிந்தனை

## சிவன் கழலிற் செறிவு

உள்ளநிறை கலைத்துறைக ளொழிவின்றிப் பயின்றவற்றாற்
றெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன் சழலிற் செறிவென்றே
கொள்ளுமுணர் வினின்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாயென்றும் பயின்றுவரும் பண்புடையர்.

அறுபத்துமூன்று தனியடியார்களு ளொருவர் சிறுத்தொண்டநாயனர். இவருடைய இயற்பெயர் பரஞ்சோதியார். உள்ள நிலைக் கலைத்துறைகளாகிய நூல்களையும் பிறவுயிர்களுக்கு உபகாரமாக ஆயுள் வேதக் கலையையும் வடநாற் கலையையும் படைக்கலத் தொழிலையும் கற்று விளங்கினர்.

தமது உள்ளம் நிறைவுபெற பல கலைத்துறைகளையும் பயின்று தேர்ந்தார். அவை எல்லாவற்றாலும் எடுத்த பொருளாவது சிவன்றிருவடியிலே செறிந்த அன்புடைமையாகிய ஒழுக்கமென்பதை உணர்ந்தார். அவ்வுணர்ச்சியினல் முதன்மைபெற இயமனையுதைத்த திருவடியினிடத்து அன்பு பூண்டார். அவ்வன்பினை பள்ளமடையில் நீர் ஓடுதல் போலத் தடையில்லாது பயின்றுவரக் கூடிய தகுதியுடையவரானர். "கற்றதனலாயபய என்கொல்" என்னும் திருக்குறளும் இக் கருத்தினையே விளக்குகின்றது. சேக்கிழார் நாயனர் தமது தெய்வத்தன்மைவாய்ந்த திருத்தொண்டர் புராணத்தில் அறுபத்து தனியடியார்களதும் ஒன்பது தொகையடியார்களதும் வரலாறுகளைக் கூறுகின்றார். அவ்வரலாறுகளையெல்லாம் முத்துக்களாக உவமை கூறினல் அம்முத்துக்களை ஒரு மாலையாக்க ஒருநூல் போல விளங்குவது அவ்வடியார்கள் கொண்டுள்ள சிவன் கழலிற் செறிவு. செறிவு - என்பது உறைப்புடைய ஒழுக்கம். சிவன் கழலிற் செறிவென்பது இடையறாத சிவத்தியானம்.

இடையறாத சிவத்தியானமே மக்களுடைய துன்பங்களைப் போக்க வல்லது. மக்களை வருத்துகின்ற மனமாசுகளைப் போக்க வல்லது. ஒளி வரும்போது இருள் நீங்கும்: அதுபோல இடையறாத சிவத்தியானம் மன மாசுகளை நீக்கும். மெய்ஞ்ஞானிகள் இந்த உண்மையை உணர்ந்து உலக மக்களுக்கு நன்மைக்காக இதனைத் தங்கள் வாக்கினாலும செயலினாலும் விளக்கியுள்ளனர். வற்புறுத்தினர்கள்.

சாக்கிய நாயனர் சிவன்கழலிற் செறிவே உய்யும் வகையெனத் தெளிந்தனர். எந்நிலையினின்றாலும் எந்தக் கோலம் கொண்டாலும் சிவனுடைய திருவடியை மறவாமையே பொருள் என்று துணிந்தார் புத்த வேடமாகிய துவராடை முதலியவற்றைத் துறவாதே சிவனை மறவாது பணி செய்தார். அவரது செயலினையும் அன்பினையும் சிவபெருமான் கண்டு விடைமேல் எழுந்தருளிக் காட்சி கொடுத்துச் சிவலோகத்தில் வாழும் பரிசளித்தனர்.

திருஞானசம்பந்த மூர்த்திநாயனர் தோணிபுரத்தில் ஞானப் பாலருந்தியவுடன் சிவனடியையே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தைப் பெற்றனர். சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய ஆன்மாக்கள் உய்வதற்குச் சிறந்த வழி சிவன் கழலிற் செறிவைப் பயிலுவதேயாகும். — மு. ம.

## தேவாரபாராயணம் திருவடி ஞானத்தை நல்கும்

[ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை, ஏழாலை, சுன்னுகம்.]

வேதநெறி தழைத்தோங்கவும் மிகு சைவத் துறை விளங்கவும் புனிதவாய் மலர்ந்து அழுத திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரங்கள் அருள் வாக்குகள். பன்னிரு திருமுறைகள் மந்திர வடிவான திருவாக்குகள். திருஞானசம்பந்தப் பெருமான் தமது வாக்குப் பதிவாக்கு என்பதை திருஇலம்பயங் கோட்டூர் என்னும் திருப்பதியைப் பாடும் பாடல்கள் ஒவ்வொன்றிலும் கூறியுள்ளார்.

"நீருளான் தீயுளான் அந்தரத்துளான் நினைப்பவர் மனத்துளான் நித்தமா எத்தும் ஊருளான் எனதுரை தனதுரையாக ஒற்றை வெள்ளேறு கந்தேறிய வொருவன்............" என்று கூறியுள்ளார் பேயினல் பீடிக்கப்பட்டவன் வாய்ச் சொற்களெல்லாம் பேயின் சொற்களேயன்றி அவனுடைய ஆகாவாறு போலச் சீவன் முத்தரின் வாக்கு சிவபெருமான் வாக்குகளேயன்றி அவன் சொற்கள் ஆகா. சிவபெருமானுல் அதிட்டிக்கப்பட்டதான் கூறும் வாக்குகள் எல்லாம் அச் சிவபெருமான் வாக்குகளே அன்றித் தன்வாக்கு ஆகாமையை அறிவிக்கும் பொருட்டு எனதுரை தனதுரை என்று கூறியுள்ளார்.

திருஞானசம்பந்தப் பெருமான் மூன்றுமவயதில் உலக மாதாவாகிய உமை அம்மையாரின் திருமுலைப்பாலை உண்டமையால் அவரின் மாயாசர்பந்தம் ஒழிந்தது. அவர் சிவஞானசமபந்தரானர். தூய சிவ ஒளிக்கும் தூயவாக்குகளுக்கும் உறைவிடமாகவும் பாத்திரமாகவும் விளங்கினர். சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் உவமையிலாக்கலை ஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம் தவமுனிவர் சம்பந்தரின் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பாயத்தொடங்கிற்று.

இத்தகைய அருமை பெருமை தனிச் சிறப்பு வாய்ந்த தேவாரங்களை சைவர்களாகிய நாம் மெய்ப்பயபக்தியோடும் அன்போடும் வழிபட்டு ஓதியுணர்ந்து தெளிவடைந்து வாழவேண்டும். மாயை வலையுள் சிக்கித் தத்தளிக்கும் உலகமக்களுக்கு இது தேவாரங்கள் சிறந்த ஔடதம். உடற்பிணியையும், உயிர்ப்பிணியாகிய ஆணவத்தையும் போக்க வல்லவை. பக்தியையும், ஞானத்தையும் தரவல்லவை. பலகாலம தேவார பாராயணம செய்த ஒருவருக்கு திருவடி ஞானம கைகூடும்.

ஆணவம்தேய்ந்து வலிமை குன்றும். ஞானஒளி பக்தனின் உள்ளததினில் உதயமாகும். திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளின் தேவாரங்களுக்கு ஒரு தனி ஆற்றலுண்டு.

"ஓடம் சிவிகை உலவாக்கிழி யடைக்கப்
பாடல் பனைதாளம் பாலை நெய்தல் — ஏடெதிர் வெப்பு
என்புக் குயிர்கொடுத் தல்ஈங் கிவைதாம் ஒங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்"

என்று பதினன்கு சாத்திரங்களுள் ஒன்றாகிய திருக்களிற்றுப்படியாரில் கூறப்பட்டுள்ளது.

உலக விவகாரங்களில்சிக்கி ஆழ்ந்திருக்கும் எமக்கு அளப்பரும் இன்னல்கள் உள.

"கடலின் திரை போல் வரும் கலக்கம் .... .... ..." என்று மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் கூறியுள்ளார். பிணி, மூப்புச் சாக்காடு என்னும் அல்லலகளுக்கும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் அறுவகைக் குற்றங்களுக்கும் அதனல் வரும விளைவுகளுக்கும ஆளாகிமாளாமல்காப்பாற்றி வைப்பவை தேவாரங்கள், இவற்றின் வேகம் நீங்கி, உள்ளம் திருவருள் வசப்பட்டுத் தணிந்த உள்ளமாகப் பரிணமிக்கும். நினைப்பன, பேசுவன, செய்வன எல்லாம் சிவச்செயல்களாக, இறைபணியாக மாறும். உள்ளம் தெளிவடையும்.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருவருளை முன்னிட்டே சமணர்களுடன் வாதுசெய்ய ஆரம்பிக்கிறார்.

"நோக்கிட விதியிலாதாரை நோக்கியான வாதுசெய்யத் தீக்கனல் மேனியானே திருவுளமே" எனறு பிள்ளையார் கேட்பதாக சேக்கிழார் சுவாமிகள் கூறுகிறார். மதுரைக்கு சம்பந்தப்பெருமான் புறப்படும்போது திருநாவுக்கரசு சுவாமிகள் அவருக்குக் காலம் நல்லாயில்லை எனக் கூறினர். அதற்கு ஞானசம்பந்தர், கோளறு பதிகமாகிய "வேயுறு தோளிபங்கன்"... என்ற தொடக்கத்தையுடைய அரிய பதிகத்தைப் பாடினர். அடியாருக்கு கிரகங்கள் தீமை செய்யாது எனக் கூறினர்

"கோதியுறு காலனங்கி நமனோடு தூதர் கோடுநோய்களான பலவும்" என்றும்,

வளர்ச்சி 3ம் பக்க

## திரு. C. N. தேவராசன்

இவர் தமது 83 ஆவது வயதில் மானிப்பாயிலுள்ள தமது இல்லத்தில் சிவபதமடைந்தனர் இவர் தமிழ் மொழிக்கும் சைவ சமயத்துக்கும் பெருந்தொண்டாற்றிய பெருங் குடும்பத்தைச்சேர்ந்தவர். பழைமை வாய்ந்த தமிழ் நூல்களை அச்சேற்றியவரும், தமிழ் மொழி விற்பன்னரும், சைவசமய சீலருமான திரு சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களும், திரு சி. வை. சின்னப்பாபிள்ளையவர்களும் இவருடைய தந்தையாரின் சகோதரர்கள். இவருடைய தந்தையார் சென்னையில் டாக்டராகக் கடமையாற்றியவர்.

திரு. தேவராசன் அவர்கள் ஸேர் பொன். இராமநாதன் அவர்களுடைய அணுக்கத்தொண்டன். ஸேர். பொன் இராமநாதன் அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரியை அமைக்கும் காலத்தில் திரு. தேவராசன், அவருக்குக் காரியதரிசியாகக் கடமையாற்றினர். ஸேர். பொன் இராமநாதன் அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழ்மக்கள் வாழவேண்டுமென்ற விருப்புடன் "இராமநாதன்" என்றெரு மாதச் சஞ்சிகையை வெளியிட்டனர்.

இவர் சிலகாலம் ஆங்கில இந்துசாதனத்தின் உதவிப பத்திராதிபராகவும் கடமையாற்றினர். கணக்குப் பரிசோதனையில் நிபுணர். கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக கணக்குகள் தயாரிப்பதைப் பற்றி நூல்கள் வெளியிட்டிருக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் ஒரு சர்வகலாசாலை நிறுவப்படுதலைப் பற்றி அரசாங்கத்துக் பலமுறை விண்ணப்பஞ் செய்தனர். விசாரணைக் குழுக்களுக்கு முன் தன் கருத்துக்களை வெளியிட்டனர். அவர் சிவபதமடையச் சில தினங்களுக்கு முன்னும் யாழ்ப்பாணச் சர்வகலாசாலையைப் பற்றி ஒரு அறிக்கையை எங்கள் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் பிரசுரஞ் செய்தனர். — —

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், காங்கேசன் துறை வீதி 284-ம நம்பர் கடையில் திரு கா. ந. இளையதம்பி அவர்களிடம் 1970 ம் ஞூ பெப்ரவரி (மாசி) மீ 1-ந் (1-2-70) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் 19-6-71 திகதிக்கு முன் மீட்கப்படாதவை 1971 ம் ஞூ யூன் (ஆனி) மீ 21-ம் திகதி (21-6-71) திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்.
கொமிஷனரும விலைமதிப்பாளரும்.
எம் 64 21, 28-5-71,

"இராசகிரி"
643, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

தும்பளை, பருத்தித்துறை. வடலிப்பாதியிலிருக்கும் அடைவு பிடிக்கும் ஸ்ரீமதி நா. சிவப்பிரகாசம், ஸ்ரீமதி வே விநாசித்தம்பி அவர்களிடம் 1969-ம் வருடம் தை மாதம் 1-ம் திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் தவணை தப்பி மீட்கப்படாதவை 1971-ம் ஞூ ஆடி மாதம் 7-ம் திகதி (7—7—71) புதன் கிழமை முற்பகல் 9-30 மணிதொடக்கம் ஷெ அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கா. முத்துக்குமாருஐயர்
தொமிசனரும் விலைமதிப்பாளரும்
எம். 65. 21, 28-5-71

"சந்நிதி வேல்"
பருத்தித்துறை,
16-5-71.

## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

| | |
|---|---|
| உள்நாடு | |
| ஆங்கிலம் | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |

## தேவார பாராயணத் திருவடி ஞானத்தை

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

"வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும் மிகையான பூதமவையும் அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே" என்று அடியவர்களுக்கும் திருவடி உணர்வு கைவந்தவர்களுக்கும் கோளும், நாளும் தீங்கு புரியா என்று ஆணையிட்டுக் கூறியுள்ளார்.

"நான்று கோளும் நாளும் அடியாரை வந்துக லிாதய வண்ணம் உரைசோல் ஆணைசோல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே" என்று இறுதிப் பாட்டில் சம்பந்தப்பெருமான் கூறியுள்ளார்.

தினமும் சைவர்களாகிய நாம் உறுதியோடும் நம்பிக்கையோடும் இப்பதிகத்தைப் பாராயணம் செய்தால் முற்செய்வினையின் வலிமைகுன்றும்.

முன்செய்வினையால் ஆன்மாக்களாகிய நாம் இடர் உறுகிறோம். அதனையழிக்க உபாயம் கூறுகிறார் திருஞானசம்பந்தர்,

"மறையுடையாய்தோ
லுடையாய்வார் சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே
யென்றனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றம்
ஓராய், கொள்கையினல் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே"

என்று கூறியுள்ளார். இப்பதிகத்தையும் காம் நாடோறும் பாராயணம் செய்ய வேண்டும். (வளரும்)

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு. இல: M B 11918
(1) கந்தையா சோமசுந்தரம் மனைவி
(2) திலகவதி அம்மா இருவரும் காரைதீவு கிழக்கு — வழக்காளி
எதிராக
ஆறுமுகம் கார்த்திகேசு குழந்தைவேலு ஓமந்தை — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 11918 -ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971-ம் ஆ. ஆடி மீ 5-ம் உ (5-7-71) திங்கள்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 6,860-ம் 8-8-70 தொடக்கம் 21-12-71 வரைக்கும் ரூபா 4,000 க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 401-25

ஆதன விபரம்

வடமாகாணம் வவுனியா வடக்கு டிஸ்திறிக் அப்புக்குட்டி இணற்றடி கோயிற்பற்று மராக்காரன்குளம் அல்லது வேப்பங்குளத்தின் கூட்டைபயடி வயல் இத்திலடி வயல் "நாவிலியடியின் குளமும் வேப்படியின் வயலும் மறு பிரிவும்" என்னும் காணி 25 ஏக்கர் இதின் எல்லை கிழக்கு கிராமச்சங்கத்து றேட்டு (Village Committee Road) வடக்கு வீரமாகு ராசையாவும் மறுபேரும். மேற்கு முடிக்கரிய ஆதனம் தெற்கு மாக்கம்புலம் அல்லது வேப்பங்குலங்காடு இது அடங்கலும்.

இ. கனகரத்தினம்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
35/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
எம், 67, 28-5-71

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணார்பண்ணை மேற்கு. யாழ்ப்பாணம்.
1. நைனா முகம்மது கைப்பெண் சுல்தான் பீபி
2. நைனாமுகம்மது முகமது சலீம்
3. அப்துல் சபூர் பெண் எகியா உமமா
—வழக்காளிகள்

இல. M B 10679
எதிராக
வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்.
அசனா மரிக்காயர் கச்சு முகமது —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10679-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1971-ம் ஸூ யூன்மீ 29-ம் திகதி (29-6-71) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபாய் 14,015/-ம், 14-3-69 தொடக்கம் 2-12-69 வரைக்கும் ரூபாய் 13,500/-க்கு 6 வீத வட்டியும் அதன்பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 387-92 சதமும் செலவில் ரூபாய் 200/-ம், தீர்வைத் தொகையில் ரூபாய் 1500/- கட்டப்பட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென் கிழக்கு இறை விளாத்திப்புலம்" (Vilaththipulam) D. 189/247 பதிவின்படி வி பர 1 குளி 16, 1/8 ஆறல் D. 207/33 பதிவின்படி வி பர. 1 குளி 15, 1/8 இந்த வி. பர. 1 குளி 16, 1/8க்கும் எல்லை கிழக்கும் மேற்கும் றோட்டு. வடக்கு ஈட்டுக்காரரின் ஆதனம், தெற்கு கையொழுங்கை இடங்கலும்.

மல்லாகம்.
23-5-71
எம் 68, 28-5

செ. பாண்டித்துரை
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
Commissineor of Sales & Values

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம் M B 11319
தம்பர் செல்லப்பா ஈவினை — வழக்காளி
எதிராக
இளையதம்பியின் கைம்பெண் பொன்னுப்பிள்ளை ஈவினை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11319-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ஆம் ஆண்டு ஆடி மாதம் 9-ஆம திகதி (9 7—71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 4,350/— ம் 12-12-69 தொடக்கம் 15-5-70 வரைக்கும் ரூபா 4,000/- க்கு 8 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 411-46 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று புன்னைக்கட்டுவன் இறை, "கணக்காயபுலம்" நில. வரப்பு (23) இருபத்திமூன்று வான் பயிர்களும் கிணறும் கிழக்கு இளையதம்பியின் கைம்பெண் பொன்னுப்பிள்ளையினதும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். வடக்கு விசுவநாதரின் பிள்ளைகளுக்கும் சின்னத்தம்பி செல்லையாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். மேற்கு மாணிக்கம் செல்லையாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். தெற்கு தம்பிராஜா இராசரத்தினத்திற்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். இது அடங்கலும். யாழ்ப்பாணடிஸ்திறிக் காணிக்கந்தோர் பதிவுஇலக்கம் H 353/265

அராலி வடக்கு
வட்டுக்கோட்டை. 19-5-71

சி. செ. பாலசிங்கம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 66 28-5-71

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

கோப்பாய் தெற்கு (1) அல்பேட் இம்மனுவேல் கனகசேனன் லூவிஸ் (2) பெண் வயலற் மனோன்மணிலூவிஸ் — வழக்காளிகள்
வழ. இல: M B 9202
எதிராக
கோப்பாய் தெற்கு (1) ஆறுமுகம் சுப்பிரமணியம் (தபாலசேவை) (2) பெண் ருசனுபதி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9202-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1971 ஆம் ஆ. ஆனி-மீ 28-ம் திகதி [28-6-71] திங்கட்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு முதலாம் காணியும் 9-15 மணிக்கு இரண்டாம் காணியும் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில்விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 2017-00-ம் 26-6-67 தொடக்கம் 20-1-68 வரைக்கும் ரூபா 1500/- க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 329-50 இதில் ரூபா 1.0/- வட்டிக் கணக்காக குறைபடவேண்டும்.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பிரிவு கோப்பாய் கோயிற்பற்று கோப்பாய் தெற்கு றை 'கெனிதவயல்' பர.தெ. இல 5-0 இதற்கெல்லை கிழக்கு சிவக்கொழுந்து பெண் ருசம்மாவினுதனம். வடக்கு சுப்பிரமணியம் தம்பிப்பிள்ளையினுதனம். மேற்கு வைரமுத்து நாகேந்திரத்தினுதனம். தெற்கு செல்லையா பெண் விசாலாட்சியினுதனம். இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும் பதிவிலக்கம் K 240/263.

டை யூர் 'கெனிதவயல்" பர தெ இல 82-0 இதற்கெல்லை கிழக்கு சிவக்கொழுந்து பெண் இராசம்மாவின் ஆதனத்தின் பகுதி உரிமைப்படியுள்ள ஆதனம் வடக்கு இரண்டாமெதிரியினுதனம், மேற்கு சுப்பிரமணியம் சண்முகனுதனினுதனம், தெற்கு றேட்டு, இதடங்கலில் பிரிவிடப்படாத 11 நெற்பரப்பு சகல உரிமைகளுடனும் அதைச் சேர்ந்தவைகளும். பதிவிலக்கம் K 240/264

14, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்,
25—5—71

அ. போ. எதிர்மனசிங்கி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 71 28—5—71

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழ. இல: M B 10154
சதாசிவம் தம்பிராசா, யாழ்ப்பாணம் —வழக்காளி
எதிராக
1. வயித்தி தொமஸ் 2. பெண் பொன்னு
இணுவில் றோட். மானிப்பாய். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 10154ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆ. ஆனி மாதம் 26ஆம் திகதி (26-6-71) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: ரூபாய் 3000/-ம், 27—2—70இல் தீர்மானித்தபடி செலவு ரூபாய் 250/-ம், இன்னும் 25—8—69 இல் தீர்மானித்தபடி செலவு ரூபா 52- 0ம், (கொம்மிஷன் முத்திரை ரூபாய் 9/-) (ஒன்பது ரூபாய்) இதில் 24—2—70 இல் பகிரங்கமாக கோட்டில் கட்டப்பட்ட ரூபாய் 1500/-ம், பின்னர் கட்டிய ரூபாய் 500/-ம், ரூபாய் 150/-ம் கழிக்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாய் இறை "இறுப்பைத் தோட்டம். மணக்கன் தோட்டம்" பர. கில. இலா, 3 குளி 15 · 8 இதில் மேற்குப் பக்கமாக பர, கில. இலா. 1 குளி 16 · 9 அத்துடன் பாலன் என்பவருக்குமுரிய வடக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றுப் பங்கும் தூர்வைப் பங்கும், புதிதாக திறக்கப்பட்ட கையொழுங்கையூடாக சென்று தண்ணீர் எடுக்கும் வழிவாய்க்கால் உரித்தும், இதற்கெல்லை கிழக்கு சதாசிவம் தம்பிராசா பெண் புஸ்பத்துககுமுரிய மிகுதி ஆதனம், வடக்கு ஆறுமுகம் பாலனுக்குமுரிய ஆதனம்; மேற்கு தம்பு சின்னத்தம்பி பெண் நல்லம்மாவுக்கும், தம்பையா நாகையாவின் உரிமையாளருக்குமுள்ள ஆதனம். தெற்கு யக்கப்பு மனுவேலுக்கும் பெண் முத்தம்மாவுக்குமுரிய ஆதனம்: மிகுதி ஆதனத்தின் ஊடாகபோகும் பாதை உரித்தும் உள்பட இது முழுவதும். பதிவு இல: E 370/105

167/1 கோயில் வீதி,
யாழ்ப்பாணம், 23-5-71

ப. நா தருமலிங்கம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
எம். 70 28-3 71

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம்; M B 11250
யாழ்ப்பாணம். சுண்டிக்குளி, பழைய பூக்கா வீதி,
றப்பியல்பிள்ளை யோசெவ் —வழக்காளி
எதிராக
யாழ்ப்பாணம். கரையூர், 1. சின்னப்பொடியன் மனுவல்,
2. பெண் றேசம்மா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11250-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஸூ யூன் (ஆனி)மீ 19-ம் திகதி (19-6-71) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1755/-ம், இதில் ரூபாய் 1500/-க்கு 17—11—69 திகதி தொடக்கம் 17—5—70 திகதி வரைக்கும் நூற்றுக்கு 12 வித வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு 5 வித வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 232-62 சதம் இதில் ரூபாய் 200/- இறுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூரிறை "பேயன்தலை மடையிற்புலம் அல்லது கொல்லுதோட்டம்" வி. பர. 4ம் குளி 6½ம், வீடும், செய்பயிர் வான்பயிர்களும் இதில் கிழக்குப் பக்கமாக விலப்பரப்பு (2) விற்றது நீக்கி, மேற்கே மிகுதி விலப்பரப்பு 2ம் குளி 6, 1/4ம், வீடும், பயிர்களும் ஒரு வருஷத்திற்கு கிழக்குக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர் அள்ளும் உரித்தும், கற்கூசு பாவிப்புரித்தும், குறித்த விலப்பரப்பு இரண்டும் (2) குளி 6, 1/4ம், எல்லை கிழக்கு செபமாலை அந்தோனிக்கும் பெண் நாகி அல்லது மாரியின் ஆதனம், வடக்கு இராசவிங்கம் வீதி, மேற்கு ஏ பீ. சந்தியாக்கோவின் உரிமைக்காரருக்குமுரிய ஆதனம் தெற்கு வயித்தி சந்தியாவுக்கும் பெண் ஆனுசிக்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

தெல்லிப்பழை. 28-4-71

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
Commissioner & Valuer
எம் 72 28-5-71.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

COURT OF REQUESTS - CHAVAKACHCHERI
வழ. இல: 2060
பொன்னையா கணபதிப்பிள்ளை, விடத்தல்பளை — வழக்காளி
எதிராக
சண்முகம் ஆறுமுகம், மீசாலை வடக்கு. தற்போது 472ம் இலக்க வீடு. இராமநாதபுரம், கிளிநொச்சி —எதிராளி

சாவகச்சேரி விண்ணப்பக் கோட்டில் (CORT OF REQUESTS - CHAVAKACHCHERI) 2060 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஸூ ஆனி மாதம் 23-ம் திகதி (23—6—71) புதன்கிழமை முற்பகல 11 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 600/-ம், 22-2-1969 தொடக்கம் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு வருஷம் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 5 ம், 25 சதமும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி வரணி கோவிற்பற்று மந்துவில் "கட்டையாலடி" விலப்பரப்பு வரகுச் செய்கை ஐந்து (5 Lms V. C.) எல்லை கிழக்கு சின்னத்தம்பி ஐயாத்துரையின் ஆதனம் எல்லை வடக்கு ஒழுங்கை, எல்லை மேற்கு காசித்தம்பி வேலாயுதபிள்ளையினதும் பங்காளரினதும் ஆதனம், எல்லை தெற்கு காசிநாதர் சிலப்பிள்ளையினது பிள்ளைகளின் ஆதனம். இந்த எல்லைகளுக்குள் அடங்கிய முழுக்காணியும் அதைச் சேர்ந்தவைகளும்.

"நித்தியகல்யாணி"
பலாலி றோட்,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
21—5—71

அ. சிவானந்தன்
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
எம். 75 28-5-71

# ஆலயத்தின் தத்துவம்

பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்
தம்பைநகர், பருத்தித்துறை.

( முன் வளர்ச்சி — 2 )

**எவ்வாறு வழிபடுதல்:**

இனி, இறைவனை எவ்வாறு வழிபடுதல் வேண்டும் என்பதைச் சிந்திப்போம். தெய்வப் புலமை வாய்ந்த நம் மூதாட்டியாராகிய ஔவையார் "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்று அருளிச் செய்திருப்பதால், மற்றையிடங்களிலிருந்து கடவுளை வழிபடுவதைவிட, கோயிலுக்குச் சென்று வணங்குவதே மிகவுஞ் சிறந்ததென்பது தெளிவாகப்புலப்படுகின்றது. "கோயிலில்லாதவூரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி அப்பர் பெருமானும், கோயிலில்லாதவூரை திருஇல்லாதவூரென்றும், விலங்கினங்கள் வாழும் காடென்றும், தமது தெய்வத் திருமறையில் கூறியருளினர்.

"திருக்கோயிலில்லாத திருவிலூரும்
திருவெண்ணீறணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பலதளிகளில்லாவூரும்
விருப்போடு வெண்சங்கமூதாவூரும
விதானமும் வெண்கொடியுமில்லாவூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணாவூரும்
அவையெல்லாம் ஊரல்ல, அடவிகாடே"

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கிற பரம்பொருளாகிய இறைவனை எந்த இடத்திலிருந்தும் வழிபடுவதில் குற்றமில்லை. ஆயினும் திருக்கோயிலிற் சென்று வழிபடுதலே சாலச் சிறந்ததாம். கோயில்களெல்லாம் இறைவனை வழிபடுதற்கென அமைக்கப்பட்ட தூய இடங்களாகும் கோயிலல்லாத மற்றைய இடங்களெல்லாம் மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைத் தேடுதற்குரிய முயற்சிகளும், தேடிய பொருள்களை வைத்து அநுபவித்தற்குரிய முயற்சிகளும் நடைபெறுந் தன்மை யுடையனவாயிருக்கின்றன. எனவே, மக்களுக்கு அந்த இடங்களில் அங்கேயுள்ள பொருட்களைப் பற்றிய நினைவும், அம்முயற்சிகளைப் பற்றிய நினைவுகளுமே அடுத்தடுத்து மனத்தில் தோன்றும். (வளரும்)

---

### ஆயுர்வேத வைத்திய மாணவர்கள்

யாழ்ப்பாண இலங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள வழங்கப்பட்டு வருகின்றன.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

நவாலி பலநோக்குக் கூட்டுறவு சங்கம் மட்டுப்படுத்தப்பட்டது
நவாலி மானிப்பாய் — வழக்காளி

வழ. இல: M. B. 9845 எதிராக

1. பசுபதப்பிள்ளை கைம்பெண் பூமணி — சுதுமலை
2. பசுபதபிள்ளை ராமகேஸ்வரன் சுதுமலை தற்போது ஆயுள்வேத கல்லூரி கொழும்பு
3. சுந்தரலிங்கம் மனைவி தபோதனி தேவியும் அன்னாரது கணவன் 4. P. சுந்தரலிங்கம் இருவரும் ஒதபாய் பகுதி தெமோதர பண்டாரவெல. காலஞ்சென்ற நாகலிங்கம்பிள்ளை பூரண பசுபதபிள்ளையின் உரிமைக்காரர்களாக 1-ம், 2-ம், 3-ம் எதிரிகள் உளர்.

— எதிராளிகள்

M B / 9845-ஆம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க் காணும் ஆதனம் 1971-ஆம் ஹூ யூலாய் (ஆடி) மீ 3-ம் திகதி (3—7—71) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 2063-34 சதம். மேலும் 1475 ரூபாவுக்கு 22-3-68 தொடக்கம் 6—2—69 வரை வருடமொன்றுக்கு 4 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 429-37 சதமும் பவுண்டேச் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோயிற்பற்று இணுவில்இறை "பூவோடை" நிலப்பரப்பு 25 இதற்கு எல்லை கிழக்கு வேலாயுதம் கந்தையா சுப்பிரமணியத்தினுதனம். வடக்கு முருகேசு சுப்பிரமணியததினுதனமும். சுடலை நிலமும் மேற்கு வேலுப்பிள்ளை முதலியார் அப்பாத்துரையினுதனம் தெற்கு புருசர் கந்தருக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். இது முழுவதும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
ஏலவிற்பனவாளரும்

"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம் 26—5—71.

எம். 74 28—5—71

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 28—5—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

### நல்லூரில் .........



பக்தர்: "நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் பண்முறைப் பயிற்சி வகுப்பு ஓதுவார்மூர்த்திகளைக் குருவாகக் கொண்டு நடக்க ஒழுங்காகியிருக்குது"

சித்தர்: "கரும்பு தின்னக் கூலி கேட்கும் நிலை சைவ மக்கள் சிலர் மத்தியில் எழுந்திருக்குது; இத்தகைய வகுப்புக்களினுல்– இறையுணர்வு பெருகி, பலநன்மைகள் ஏற்படும் பாருங்கோ"

"நாயன்மார் – நாதன்"

---

### பாடலிபுரம்

—:—

பீகார் மாநிலத்தின் தலைப் பட்டினமான 'பட்ணு' இனி மேல் பாடலிபுரம் என அழைக்கப்படும். இம் முடிவை பீகார் அமைச்சரவை எடுத்துள்ளது

### கால் நடைகள்

வாய் நோய், கால் நோய் போன்றவற்றினுல் புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள கால் நடைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

(மண்கும்பான் நிருபர் –மா. தி )

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 11587
அருணாசலம் தம்பிப்பிள்ளை
காரைநகர் வடக்கு — வழக்காளி

எதிராக

சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் காரைநகர் மேற்கு, காலஞ்சென்ற தனது தகப்பன் முருகேசு சங்கரப்பிள்ளையின் ஆதனத்தின் சட்டபூர்வமான பிரதிநிதியாக — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 11587-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1971-ம் ஹூ ஆனி மீ 19-ஆம் திகதி (19-6-71) சனிக்கிழமை முற்பகல் 11-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2456/–ம் 24-3-70 தொடக்கம் 17-10-70 வரைக்கும் ரூபா 1250/–க்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுத தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 349-62

**ஆதன விபரம்**

வடமராகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரை தீவு கோவிற்பற்று காரை தீவு மேற்கிறை "பயரிக்கூடல்" நி, பர. 4 பனைகளும் வடலிகளும் வேறு பயிர் வகைகளும் எல்லை கிழக்கு முருகேசு ஆறுமுகத்துக்கும் பெண் தங்கம்மாவுக்கும், பொன்னம்பலம் மைம் பெண் சிவக்கொழுந்தவுக்குமுரிய ஆதனங்கள், வடக்கு கந்தப்பர் செல்லையாவின் மக்களுக்குரிய ஆதனம், மேற்கு பொன்னம்பலம் பெண் வள்ளியம்மைக்குரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை முதலியவும். வயித்திலிங்கம் கந்தையாவுக்கும் பெண் இராசம்மாவுக்குமுரிய ஆதனமும் இதடங்கலும்.

சு. கந்தசாமி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales

19. சுவாமியார்வீதி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

எம். 76 4-6-71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கனகநாயகம் கனதீஸ்வரன், முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். — வழக்காளி

வழ. இல: M B 10224 எதிராக

1. நாகலிங்கம் ஜெயதாமும் 2. மனைவி அற்புதமலர்
கஸ்தூரியார் ரோட்டு, யாழ்பாணம். — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B10224ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு தண்டுககாணியை 1971 -ம் ஆண்டு ஆனி மீ 28-ம் திகதி (28—6—71) திங்கட்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 5651-00ம், 13-8-1968 தொடக்கம் 8—3—69 வரைக்கும் ரூபா 4124-00க்கும் 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 430-30 இதில் 2—10—70ல் தீர்வைத்தொகையாய் கொடுத்த ரூபா 4000-00 மும் கோட்டுச் செலவால் கொடுத்த ரூபா 150-00ம் கழித்து அறவிடப்படும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை "புன்னாதறையும் கொச்சிப்பள்ளம் பறட்டியன் காடும்" நிலப்பரப்பு 1 குளி 2 வீடும், குசினியும், செய்பயிர் வான்பயிர்களும் வடக்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும். இதற்கு எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை சதாசிவத்திற்கும் மனைவி நகுலாம்பிகைக்குமுரிய ஆதனம், வடக்கு வண்ணை வைத்தீசுவரன் கோவிலுக்குமுரிய ஆதனம், மேற்கு கஸ்தூரியார் ரோட்டு. தெற்கு திருஞானசம்பந்தமூர்த்தி நயனூர் மடம்.

கா. தர்மலிங்கம்
கொமிசனரும், விலைமதிப்பாளரும்

உரும்பிராய்
12-5-71

எம். 73 28-5-71

---

## Commission Sale
## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோர்ட்டில் வழ: இலக்கம் 10607
கரவெட்டி வடக்கு, வேலுப்பிள்ளை சின்னத்துரை
கைம்பெண் பொன்னம்மா — வழக்காளி

எதிராக

கரவெட்டி வடக்கு, 1 சீனிவாசகம் இராமசாமிப்பிள்ளை
2. பெண் பாறுபதிப்பிள்ளை — எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனத்தை 1971-ம் ஹூ ஆவணி மீ 5-ம் திகதி (5-8-71) வியாழக்கிழமை முற்பகல் 10–00 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று கரவெட்டி குறளிக் குறிச்சியிறை பைங்கூரன் கி. பர. 55¼ இதில் மேற்குப் புறமாக ¼ பங்குக்கு கி. பர. 13 குளி 14, 5/8 எல்லை கிழக்கு வெள்ள வாய்க்கால். வடக்கு செல்லையா கைம்பெண் சின்னம்மாவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம். மேற்கு தம்பர் பெண் பொன்னுச்சிக்கும் மறுபேருக்குமுரியவாதனம், தெற்கு பொன்னையா கைம்பெண் செல்லாச்சிக்கும் மறுபேருக்குமுரியவாதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலமடங்கலிற் சொரியலாய் கி. பர. 3 இல் சொரியலாய் அரைவாசியும் இக்காணிக்குள்ளிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும் இன்னும் இக் கிணற்றில் அமைந்திருக்கும் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்திலிதற்குரிய பங்கும் தண்ணீர் இறைக்கும் உரிததும்.

| | | |
|---|---|---|
| முதலும் வட்டியும் — — | ரூபாய் | 5020-00 |
| ரூபாய் 3000/-க்கு 23-8-69 ல் இருந்து 19-12-69 வரைக்கும் 8% ஒரு வருஷத்திற்கு | | 80-00 |
| | ரூபா | 5100-00 |
| ரூபாய் 5100/– வட்டி 19-12-69 இருந்து 19-4-70 வரைக்கும் 5% ஒரு வருஷத்திற்கு | | 63-00 |
| | ரூபா | 5163-00 |
| ரூபாய் 5163/-க்கு (19-4-70 — 5-8-71) 5 வீதம் | | |
| கோட்டுச் செலவு — | | |

R. S. இராமநாதன்
கொம்மிசனரும், விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்

"உமாபதி"
நெல்லண்டை ரேட்டு,
பருத்தித்துறை. 26-5-71

எம். 69 28-5-71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வேலுப்பிள்ளை கைம்பெண் செல்லம்மா வட்டுக்கோட்டை கிழக்கு
வழ: இல. M B 10286 எதிராக — வழக்காளி

1. கதிரேசு பற்குணராசாவும் 2. பெண் தவபாக்கியமும் – சிவியாதெரு யாழ்ப்பாணம். — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 10286ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1971ம் ஆண்டு ஆனிமாதம் 16ம் உ (16-6-71) புதன்கிழமை முற்பகல் 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 8320 – 00ம், 9—9—68 தொடக்கம் 13—3—69 வரைக்கும் ரூபாய் 6000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 371-05 இதில் ரூபாய் 175/- கொடுபட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை 'கட்டைக்கையிலிவளவு விக்கல் செட்டியோடையும் புளியடி வளவும் வடலிக்கூடலும்" கி. பர. 5 குளி 6 இதில் மேற்குப் பக்கமாக விற்ற நில. பர. 2 குளி 3½ புறநீங்கலாக மிகுதி நில. பர. 2¾ வீடும், செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு மயில்வாகனம் பெண் புவனேஸ்வரிக்குரிய ஆதனம், மேற்கு சபாரத்தினத்துக்கும் பெண் கனகவதிக்குமுரிய ஆதனம், தெற்கு கையொழுங்கையும்; ஒழுங்கையும் இந்தெல்லைகளுக்குட்டபட்ட அடங்கலும்.

சு. கந்தசாமி
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்

19 சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

எம் 77 28—5